**Date 08.07.2019** அசல் வழக்கு எண்**.173/2004** வா.சா.**2** **(**அம்சத்ராணி**)**

முதல்விசாரணை

1998 முதல் 2003 வரையில் உள்ள காலத்திற்கு வழங்கப்பட்ட எங்கள் குடும்ப அட்டை நகல் வா.சா.ஆ.1. 19.07.2000 ல் நாங்கள் கொடுத்த சட்டஅறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ 2 அதற்கான அஞ்சல் இரசீது வா.சா,ஆ.3. அதை 1 ஆம் பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.4. 20.07.2000 ல் நாங்கள் கொடுத்த செய்திதாள் விறம்பரம் வா.சா.ஆ.5. காவல்துணைஆணையரிடம் 12.08.2000 ல் நாங்கள் கொடுத்த மனுவின் அலுவலக நகல் வா.சா.ஆ.6. 17.10.2005 ல் 1 ஆம் பிரதிவாதி 2 முதல்7 பிரதிவாதிகளுக்கு எழுதிக் கொடுத்த தானசெட்டில்மெண்டு பத்திரம் நகல் தாக்கல் செய்துள்ளேன். 08.03.2017 ல் நாங்கள் செய்திதாளில் கொடுத்த பொதுஅறிவிப்பு வா.சா.ஆ.7. மேற்படி வா.சா.ஆ.1, 5, 6, 7 ஆவணங்கள் 1 முதல்7 பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை